செய்தி வெளியீடு எண்: 856 நாள் : 03.10.2010

# முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்கு சத்துணவுடன் வாழைப்பழம் தொடர்ந்து வழங்கப்படுகிறது!

## தமிழக அரசு விளக்கம்!

இன்று (3.10.2010) ஒரு நாளேட்டில் தமிழகம் முழுவதும் முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்கு வாழைப்பழம் வழங்கும் திட்டத்தின் மூலம் குழந்தைகளுக்கு வாழைப்பழம் சரியாக வழங்கப்படுவதில்லை என்றும், இத்திட்டமே மாயமாகிவிட்டது என்றும் செய்தி ஒன்று வெளிவந்துள்ளது.

தமிழக அரசின் மூலம் சத்துணவுடன் வாரம் 5 நாட்களுக்கு முட்டை வழங்கும் திட்டத்துடன், முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்கு முட்டைக்குப் பதிலாக வாரத்தில் 5 நாட்களிலும் வாழைப்பழம் வழங்கும் திட்டம் முறையாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது தமிழகத்தில் 30 ஆயிரத்து 697 குழந்தைகள் மற்றும் மாணவ மாணவியருக்கு சத்துணவுடன் முட்டைக்குப் பதிலாக வாழைப்பழம் வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக வாழைப்பழம் வாங்கத் தேவையான தொகை சத்துணவு அமைப்பாளர்களுக்கு முன்மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. முட்டையை விரும்பாத குழந்தைகளுக்கு அதற்குப் பதிலாக வாழைப்பழம் சத்துணவுடன் தடையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது.

எனவே, ஒரு குழந்தை கூட வாழைப்பழம் விரும்பாதது ஆச்சரியமாக உள்ளது எனவும், சத்துணவு அமைப்பாளர்களே தங்கள் வசதிக்கேற்ப வாழைப்பழம் வழங்குவது குறித்து முடிவு செய்து விடுகின்றனர் எனவும் அந்த நாளிதழில் செய்தி வெளியிட்டிருப்பது முற்றிலும் தவறானதாகும்.

* * *

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9